DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC. 1114 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW.1 |
| Name | திரு. கிருஷ்ணமூர்த்தி |
| Father Name | சாமிநாதன் |
| Village | வள்ளிவிளை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 44 |

**(1, 2 எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்))**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 21-07-2025.(நேரம்: 02.45PM )

**முதல்விசாரணை**

1. நான் தற்போது வள்ளிவிளையில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் இருசக்கர வாகன கண்சலட்டிங் வைத்து தொழில் செய்து வருகிறேன்.

3.சாட்சிகள் பொன்னரசி மற்றும் கணேஷ் என்ற கோடிஸ்வரன் என்பவரை எனக்கு தெரியும்.

4. இவ்வழக்கின் ஆஜர் இரு எதிரிகளையு்ம் எனக்கு தெரியும்.

5.கடந்த 20.08.2020 ஆம் தேதி எங்கள் ஊரில் உள்ள பார்வதியம்மன்கோவிலில் குறி சொல்வதற்காக ஆள்களை தங்க வைத்திருந்தார்கள்.

6.கொராணா காலம் என்பதால் ஊருக்குள் அனுமதிக்கவேண்டாம் என்று ஊர் பெரியவர்களுடன் நானும், வேண்டுகோளாக எதிரி நாராயணன் என்பவரிடம் கேட்டேன்.

7. அதே தேதியில் காலை 11.30 மணியளவில் என் வீட்டில் எனது அம்மா இருக்கும்போது இவ்வழக்கின் எதிரி நாராயணன் , மாடசாமி மற்றும் குமார் ஆகியோர்கள் வந்து " உனது மகன் பெரிய ஆளா " என்றும் உனது மகனை வெட்டிவிடுவோம், குத்திவிடுவோம் என்று இவ்வழக்கின் எதிரிகள் ஏசினார்கள்.

8. பின்பு எனது அம்மா போன் மூலமாக எனக்கு தகவல் தெரிவித்தவுடன் நான் குரும்பூர் காவல் நிலையத்தில் சென்று இதுசம்மந்தமாக புகார் மனு கொடுத்தேன்.

9. இதை தெரிந்துக்கொண்டு இவ்வழக்கின் எதிரிகள் மாடசாமி மற்றும் நாராயணன் மறுநாள் 21.08.2020 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில் நான் எனது வீட்டின் வெளியே நின்றுக்கொண்டிருக்கும்போது இவ்வழக்கின் எதிரிகள் நாராயணன் ,மாடசாமி ஆகியோர்கள் அங்கு வந்து என்னை பார்த்து "தேவடியா மகனே, சுன்னி மகனே " என தகாத வார்த்தையால் அசிங்கமாக ஏசினார்கள்.

10.பின்பு அருவாளை வைத்து இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் என்னை தாக்க வந்தார்கள்.

11.என்னுடைய அலறல் சத்தம் கேட்டவுடன் , பக்கத்தில் நின்ற பொன்னரசி மற்றும் கணேஷ் என்ற கோடீஸ்வரன் அங்கு வந்து சண்டையை விலக்கி விட்டார்கள்.

12. உன்னை உயிருடன் விடமாட்டேன். துண்டு துண்டாக வெட்டி விடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள்.

13. பின்பு இதுசம்மந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் புகார் மனு தாக்கல் செய்தேன்.

14.என்னிடம் காட்டப்படும் புகார் மனுவுடன் உள்ள என்னால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கிருஷ்ணமூர்த்தி என்ற கையெழுத்து என்னுடையது தான்.

15. அந்த பிரமாண வாக்குமூலத்துடன் கூடிய புகார் மனு நான் கொடுத்தது தான். **அந்த பிரமாண வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகார் மனு அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**16.**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் தான் என்னை அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார் என்று அடையாளம் காட்டினார்.

17. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது. //

(ஒ/ம்)G.ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 1(மு.பொ)
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC. 1114 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | திருமதி.பொன்னரசி |
| Husband Name | சாமிநாதன் |
| Village | வள்ளிவிளை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 73 |

**(1, 2 எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்))**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 21-07-2025.(நேரம்: 02.55PM )

**முதல்விசாரணை**

1. நான் தற்போது வள்ளிவிளையில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் வீட்டில் குடிதனம் செய்து வருகிறேன்.

3.அசா 1 எனது மகன் ஆவார். சாட்சி கணேஷ் என்ற கோடீஸ்வரனை எனக்கு தெரியும். இவ்வழக்கின் ஆஜர் இரு எதிரிகளையும் எனக்கு தெரியும்.

4. கடந்த 2020 ஆம் ஆண்டு ஒருநாள் 11.00 மணியளவில் பார்வதியம்மன் கோவில் அருகே உள்ள எனது வீட்டில் நான் இருக்கும்போது இவ்வழக்கின் ஆஜர் இரு எதிரிகளும் அங்கு வந்து எனது மகனை எங்கே என கேட்டு நாங்கள் வெட்டி விடுவோம், குத்தி விடுவோம் என்று சொன்னார்கள்.

5. பின்பு எனது மகனிடம் நான் இதுசம்மந்தமாக கூறினேன்.

6.பின்பு குரும்பூர் காவல் நிலையம் சென்று எனது மகன் புகார் மனு கொடுத்தார்.

7.பின்பு மறுநாள் எனது மகனிடம் எதிரி மாடசாமி சண்டை போட்டார்கள்.

8. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது. //

(ஒ/ம்)G.ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 1(மு.பொ)
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC. 1114 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 3 |
| Name | திரு. கணேஷ் என்ற கோடீஸ்வரன் |
| Father Name | பால்ராஜ் |
| Village | வள்ளிவிளை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 37 |

<u>**(1, 2 எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்) )**</u>

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 21-07-2025.(நேரம்: 03.00PM )

<u>**முதல்விசாரணை**</u>

1. நான் தற்போது வள்ளிவிளையில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் சொந்தமாக தொழில் செய்து வருகிறேன்.

3. அசா 1, 2 மற்றும் இவ்வழக்கின் ஆஜர் இரு எதிரிகளையும் எனக்கு தெரியும்.

4. கடந்த 21.08.2020 ஆம் தேதியில் இரவு 10.30 மணியளவில் நான் வள்ளிவிளையில் உள்ள அசா 1 ன் வீட்டின் பக்கத்தில் உள்ள எனது வீட்டில் நான் இருக்கும்போது இவ்வழக்கின் ஆஜர் இரு எதிரிகளும் அசா 1 கிருஷ்ணமூர்த்தியிடம் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்.

5.பின்பு நான் சத்தம்போட்டு சண்டையை விலக்கி விட்டேன்.

6. வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது,

7. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அ.சா 3 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 3 ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 21.08.2020 ஆம் தேதி இரவு 11.00 மணியளவில் நானும், அசா 1 கிருஷ்ண மூர்த்தியும் அவரது வீட்டின் முன்பு நின்று பேசிக்கொண்டிருக்கும்போது இவ்வழக்கின் இரு எதிரிகளும் அங்கு வந்து அசா 1 ஐ பார்த்து " தேவடியா மவனே, சுன்னி மவனே" என்று கெட்டவார்த்தையால் அசிங்கமாக பேசினார்கள் என்று சொன்னால் சரிதான். பின்பு அசா 1 ஐ பார்த்து ஒரு வாரத்தில் வெட்டி கொலை செய்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்று சொன்னால் சரிதான்.

இதை பார்த்துக்கொண்டிருந்த நானும், சாட்சி பொன்னரசியும் சத்தம்போட்டு சண்டையை விலக்கிவிட்டோம் என்று சொன்னால் சரிதான். இது சம்மந்தமாக அசா 1 புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது. //

(ஒ/ம்)G.ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 1(மு.பொ)
ஸ்ரீவைகுண்டம்.